211

உ

கணபதி துணை.

# சிவசுப்பிரமண்ணியர், நடேசர், விஷ்ணு, வஞ்சூரம்மன் கீர்த்தனைகள்.

OFFICE OF THE REGISTRAR OF ...
REGISTERED
22 APR 1910
MADRAS
21
1910

இவை
குடியாத்தம் தாலூக்கா வஞ்சூர் கிராமமணியம்
சபாபதி முதலியார் குமாரர்
வீராசாமி முதலியாரவர்களால்
இயற்றப்பட்டு

ஸ்ரீமத்
அ. வெ. வித்வான் துரைசாமி ஆச்சாரியவர்களால்
பரிசோதித்து

மேற்படி வஞ்சூர் பஜனைக்கூட்டத்தார்களும்
வெ. கி. அருணாசல முதலியார் குமாரர்
வெ. அ. கிருஷ்ணசாமி முதலியாரும்
கேட்டுக்கொண்டபடி

மேற்படி வீராசாமி முதலியார் குமாரர்
வெங்கிடசுப்பு முதலியாரால்

வேலூர்:
சுந்தர விநாயகர் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது

1910.

உ

கணபதி துணை,

# சிவசுப்ரமண்யர், நடேசர், விஷ்ணு, வஞ்சூரம்மன் கீர்த்தனைகள்.

இவை

குடியாத்தம் தாலூக்கா வஞ்சூர் கிராமமணியம்
சுப்பராய முதலியார் குமாரர்
வீராசாமி முதலியாரவர்களால்
இயற்றப்பட்டு

ஸ்ரீமத் அ. வெ. வித்வான் துரைசாமி ஆச்சாரியவர்களால்
பரிசோதித்து
ஷை வஞ்சூர் பஜனைக்கூட்டத்தார்களும் வெ. சி. அருணாசல
முதலியார் குமாரர் வெ. ஆ. கிருஷ்ணசாமி முதலியாரும்
கேட்டுக்கொண்டபடி

மேல்படி வீராசாமி முதலியார் குமாரர்
வேங்கிடசுப்பு முதலியாரால்

வேலூர்:
சுந்தர விநாயகர் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டன.

1910.

# சாத்துகவிகள்.

ஸ்ரீமத்

## அ. வெ. வித்வான் துரைசாமி ஆசாரியவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பேர்மலிந்த புகழ்ப்பாலி நதிவாமத் தளகையெனப் பிறங்கும் வண்மைச்
சீர்மலிந்த வஞ்சிநகரக் கதிபதிவே ளாளகுலத் திலகன் பொற்பூண்
வார்மலிந்த தனத்தியர்கண் மகிழ்சேய்சங் கரனரிதம் மலர்த்தாட் கான
சார்மலிந்த கீர்த்தனைப்பா புனைந்தனன் வீராசாமி நாவ லோனே. (௧)

அப்பாவின் சொற்பொருளின் சுவையறிந்துக் குடமுனிவ னப்பாவப்பா
அப்பாவென் றகம்வெள்கி மலைப்புகுந்தா னவைத்தலைக்கொ ளாதிசேடன்
ஒப்பாவே னென்னவனுக் கெனமொழிய விருசெவிப்பு மொழிந்தியாதுஞ்
செப்பாம லுப்பினாதும் போதாதுப் புவிசமந்துத் தியக்குற்றானே. (௨)

ம-ள-ள-ஸ்ரீ, திருவனந்தபுரம்

## அப்பாசாமி கவிராஜரவர்களாலியற்றிய

நேரிசை வெண்பா.

வேள்சம்ப ரிபிசைவிஞ்சு பஜனைத்தமிழை
தாளமொடு ராகந்தனை யமைத்து—ஆள்விலைசயன்
வஞ்சியூர் வாழ்வீரா சாமியுரைத்தான் பழம்பா
லஞ்சினியாக வுலகில்.

கட்டளைக்கலிப்பா.

செந்நெல்கன்னல்விளையுங்க ழனிசூழ்
சிரமாகதிக்குத்தாமாகவே
துன்னும்வஞ்சியூர் வாழ்கல்கைமாண்குலத்
தோன்றல்வண்வீரா சாமிநன்னாவலன்
மன்னுவேள்சம்பரிபிசைச் கீர்த்தனை
வழுத்தவின்சுவைக் கேட்டிசைஞாரதன்
இன்னமோர்தாக்கேட்டிட வெண்ணியே
யேக்கங்கொண்டலைகின்றன னெங்குமே.

பனம்பாக்கம் அகத்திங்கக்கவிராயர் குமாரர்

## பாலசுப்பிரமணியக்கவிராயர் அவர்களியற்றிய

கட்டளைக்கலித்துறை.

தண்ணீர் வளஞ்செயும் வஞ்சியூர் வாழ்வீராசாமி சொன்ன
பண்ணீருறுங்கீர்த்தனைச் சுவைக்கஞ்சிப் பழமிளகிக்
கண்ணீர்*சொரிந்தனை யென்கொல் கிம்மால் கடிபொழின்மூப்
புண்†ணீருடனே கார்க்குவாலெழில் பூங்கொடியே.

---

* கண்ணீர் = கள், நீர், தேன். † மூப்புள் = மூன் றுவகைப் பறவை,
அவை:— அன்னம், கோகிலம், சாதகனவாய்ப்புள்.

வேலூர் சலவன்பேட்டையில் வசிக்கும் தமிழ்ப்பண்டிதரும்
முனிசிபல் ஆபீசு கிளார்க்குமாகிய ம-ா-ா-ஸ்ரீ,
வே. செ. குப்புசாமி முதலியாரவர்களியற்றிய

வெண்பா.

சங்கரனார் தம்மேல் தமிழ்கீர்த்தனம் புகன்றான்
துங்கவருங் குரில்வாழ் தூயனைப்—கங்கைபார்
நற்குலத்தில் வந்துதித்த நண்பன் வீராசாமி
பொற்கொடி நேர்மின்னே புகல்.

வேலூர் தாலூக்கா ஒதியமாநகரம் பௌரோஹிதம் ஸ்ரீமத்
கோ. நாராயணாசாரி அவர்களியற்றிய

வெண்பா.

முத்தமிழை நன்குணர்ந்த மூதறிஞரெல்லோருஞ்
சித்தமிழைந் தன்பூடச செப்பினன் சங்—கத்தமிழார்
வாதறுத்தான் றன்றந்தைமாமன் வஞ்ஞுராடம்
மீதினித்தாய்வீரா சாமி.

குடியாத்தம் தாலூக்கா சென்னங்குப்பம்
ரிஜல்ட்டு பாட்சாலை உபாத்தியாயர்
பி. சி. செ. கோவிந்ததாசரவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

அண்டரொடு முனிவருக் கமலமா யசலயா
யனாதியாய் நின்றபெம்மான்
எண்டிசையும் புகழ்கின்ற தணிகைவா ழறுமுகவன்
இணையடிக் கன்புற்றநற்
றொண்டன் வீராசாமி யன்பர்மகிழ் வெய்திடத்
தொகுத்தநற் கீர்த்தனங்கள்
கண்டுகுட மாமுனிவன் மகிழ்வெய்தி னனிதின்
கருத்தென்ன சொல்வன்மாதே.

உ

கணபதி துணை.

# கீர்த்தனைகள்.



## விநாயகர் துதி.

### விருத்தம்.

பொன்பூத்ததென்னவிதழ் விரிசமலத்துறுமணக்கு புளகக்கொங்கை
தென்பூத்தவாகமதிற் சுவடுபெறநாயக்குமரித் திசைமுகத்தோன்
மன்பூத்தவடிமுடியுங் காணுதவெம்பிறையு மாதேமாக்கும்
முன்பூத்தபிரணவமாங் குஞ்சரத்தையஞ்சலித்து முன்னுவோமால்.

இராகம்-நாட்டை, தாளம்-ஆதி.

பல்லவி.

கீர்த்தனகணநாதா ஓம்திம் பரிபுர
நீராஜபதத்தொனி (கீர்த்தன)

அநுபல்லவி.

வெற்றனமெனுநடை பொற்றனத்திருமிடை
கொற்றனையருளிய புத்திராவாமருள் (கீர்த்தன)

சரணங்கள்.

துங்கமுமதமா தங்கவதனமோ
டெங்குநிறைந்த வனே
அங்கைக்கனியதனை தலைக்கக்கொண்டுணசிவ
சங்கரன் றனிலல பிங்கிதமுடன்வரும (கீர்த்தன)

திருவாக்கையின் பார்கைநீகர்மொழி
வாருவல்லைத்த னா
காகவிழியின் மணி யேகமுதலேயெய்த
மேகமனையமேனி காருநதன் மருகாவோ (கீர்த்தனை)

பத்தியுடனேயென் சித்தியும்பரம
முத்தித்தரும வனே
சத்திசிதமுக்தி பத்தன்வீராசாமி
தித்திக்ககவிசொல சித்தந்திலுளியருள் (கீர்த்தனை)



## சுப்ரமண்யர் கீர்த்தனைகள்.

இராகம்-ஆனந்தபைரவி, அடதாளம்.

பல்லவி

ஐயா அருள்புரிகுவாய்- அணயருக்கிணி
மெய்யாவரக் தருகுவாய்.

அநுபல்லவி.

செய்யர்வயல்கள்சூழும் சீர்காங்கேயநல்லூர்வாழ்
துய்யாதிகழ்பன்னிருகையா கடம்பமணி (ஐயா)

சரணங்கள்.

முத்தனுக்குகந்தருள் புத்திரசிகா மணியே
முருகனே சரவணந் தனில்வந்த கனியே
சித்தமகிழ்ந்துவர சிறுகனுனையணிய
சொந்தர்மறையேசிகர் சேவடிதனைதந்து (ஐயா)

கண்ணன் திருமருகா கார்த்திகேயா குகா
விண்ணவர் அதிபோகா வேண்டுவ தருள் தியாகா
வண்ண மயில்மேலேறி வந் தடியவர்க்கோரு வரம்
எண்ணங்களை முடித்து இனிய சுகமளிக்கும் (ஐயா)

திங்கள் வதனுவுமை பங்கன் மகிழ் சுதனே
ஐங்கரனுக் கிளைய செங்கல்வ ராயனே
மங்கை வள்ளி தெய்வயானை சமேதனே
வந்து வீராசாமிதன் வரந்தருங்காங்கேயனே (ஐயா)

---

இராகம்-காபி, தாளம்-ஆதி.

பல்லவி.

வந்து வரந்தருள்வாய்-வடிவேலா
வந்து வரந்தருள்வாய்.

சரணங்கள்.

வந்து வரந்தருள் ஐங்கரற்கிளைய
கந்தனே சுந்தரா காங்கேயவல்லூரா (வந்து)

செங்கதிர்வேலனே சேவலக்கொடியோனே
சங்கரனருளிய செங்கல்வராயனே (வந்து)

கார்வண்ணன் மருகா கார்த்திகேய முருகா
காரணியருளிய காதல்வைபோகா (வந்து)

வள்ளிமணாளனே வணங்கும்பொற்றாளனே
துள்ளிமயிலேறும் சுப்பிரமண்ணியனே (வந்து)

காலனையுதைத்த கங்காதரன்புதல்வா
பாவன்வீராசாமி பாவுக்கிரங்கியினி (வந்து)

---

இராகம்-பைரவி, அடதாளம்.

பல்லவி.

எனக்குன்னிருபதம் நினைக்கவரமருள்வாய்-ஸ்ரீகாங்கேயா
எனக்குன்னிருபதம் நினைக்கவரமருள்வாய் (எனக்)

சரணங்கள்.

எனக்குனிருபதம் நினைக்கவரமருள்
தனித்த சதாசிவன் தனக்குமகனெனும்
குணத்திலுடனவ தரித்துசொலுமொரு
கணத்திலசுரரை முடித்தவேலனே (எனக்)

துடித்த அமரரை இடித்ததாருகனை
மடித்துசிரமதை வொடித்துசிங்கனை
பிடித்துபொடிபட அடித்துவுதிரத்தை
குடித்தவுக்கிரவேல் பிடித்தருமயனே (ஞானக்)

திண்டயதுமனி ரெண்டதாயுரு
கொண்டுவரவவை கண்டுசிறிவர்ர்
தெண்டிசைபுகழ்செங் கொண்டைவாரணம்
மண்டுகொடிபிணி யண்டர்ராயகா (ஞானக்)

ஆடுத்தவிந்திரன் கொடுத்தமகள்மண
முடித்துவள்ளியின்கை பிடித்தவரவின்சொல்
தொடுத்துனை துகவி படித்துவீரசாமி
அடுத்தேனடியவ ரிடுக்கண்துலைப்பவா (ஞானக்)

---

இராகம்-கேதாரகௌளம், தாளம்-ரூபகம்.

பல்லவி.

வேலாயுதம் தாங்கும் கையா
வேண்டினேன் வரந்தரக் கையா.

அநுபல்லவி.

காலாபமயின் மீதிலே ஏற்ற
கண்யா இன்யா சுப்பிரமண்யா புண்யா கொற்ற (வேலா)

சரணங்கள்.

முந்தியமரார் முறையிட கத்தி
முன்னேர்த்துதம்பிகள் முன்னுறவே பத்தி
சிந்தியசுரர் சிரம்விழ கொத்தி
சீலா பாலா யசுர காலா லோலா சத்தி (வேலா)

முந்திதந்தை மொழிவழுவா முற்றி
முன்னேர்த்துதேவர் முத்தனடி போற்றி
சுந்திரயிருமாதுன் கை பற்றி
சூரா தீரா வரம் தாரா காரா வெற்றி (வேலா)

மாதவர்பய மகன்றனம் பொங்க
மாமுனிவர்கள் தவங்களு மோங்க
தாதாவேவீரா சாமிகலி நீங்க
தாயா வாயா கார்த்தி கேயா சேயா தங்க (வேலா)

## கீர்த்தனைகள்.

### இராகம்-முகாரி, ஆதி-தாளம்.

#### பல்லவி.

சரவணபவகாமனே ஓம் ஓம்-சரவணபவகாமனே ஓம் ஓம்
சரவண பவகாமனே.

#### அநுபல்லவி.

சரவணபவவெனும் சடாக்ஷரப்பொருளே
சச்சிதாநந்த சொரூபா
இரவணம்போலே சிரமதைத் தாக்கி
இருந்திடுமெனையாள் பிரதாபா (சரவண)

#### சரணங்கள்.

ஆதிமூலாதார அறுமுகவேலா
அம்பிகைமகிழ்சாரு கையா
ஆவலாயுன்னை அன்புடன்போற்ற
ஆனந்தங்கொண்டே னருளையா (சரவண)

ஆயிரத்தெட்டண்டமும் ஆண்டவசுரனை
அழகியவேலினால் முடித்தாய்
ஆயிரங்கண்ணன் அருளியபுதல்வி
அன்னைதெய்வானைகை பிடித்தாய் (சரவண)

வெளிமாமலைதனில் வேதியர்தங்கள்முன்
வெங்கமைசமாய்நின்ற நாதா
வேண்டினேன்நானும் வேதாந்தாவித்த
வேளையில்வந்திடவொண் ணுதா (சரவண)

மான்மகள்வள்ளி மனமகிழ்லோலா
மயிலேறிவிளையாடும் தேவா
மைந்தனும்போற்ற மலர்மால்சூற்ற
மகிழுடன் என்முன்னே வாவா (சரவண)

போரூர்தனிலே புகழ்பெறுவசுரனை
பொடிபடவாட்டிய தீரா
பொற்புறுந்தாமரை பொன்னடியேகிதம்
போற்றிடவெனக்கு நீ தாரா (சரவண)

திருச்செம்பதியா திருவாலங்காட்டீசருள்
திவ்வியபரிபூரண பாதா
தீனதயாபர சின்மய சண்முகா
தீனமகற்றிவரம் தாதா (சரவண)

116976

அண்டபிண்டமும் நீ அகிலலோகங்களும் நீ
ஆதிசிக்கவர்த ஐயா
அடியேன் மேல்கிருபை அன்புடன் வைத்து
ஆண்டிடவேணுமே மெய்யா (சரவண)
கந்தனே குமரா காங்கயதேவா
கார்த்திகையருளிய சேயா
கருதுமமரர் துயர் கண்டித்த கரனே
காலனுக்குதவிசெய்செவ் வாயா (சரவண)
பழனிமலைக்குரிய பாலசுப்பிரமணியா
பகவானே திருக்கண் பாரும்
பலகாலமுந்தனை பாடினேன் மெய்பொத்தவை
பாதுகாத்திடவே வாரும் (சரவண)
பார்புகழ்வருசூர் பாலன்வீராசாமி
பாவுக்கிரங்கியே நேரா
பரமதயாளா பரிவுடன் துதிக்கும்
பத்தர்க்குதவிநீ தாரா (சரவண)



## நடேசர் கீர்த்தனைகள்

இராகம்-முகாரி, தாளம்-ஆதி.

பல்லவி.

சம்போசதாசிவ சம்போசதாசிவ
சம்போசதாசிவ சம்போ.

## சடனங்கள்.

சம்போ சதாசிவ சச்சிதானந்த
சங்கரி மகிழ் மணவாளா
சாரங்கபாணி சர்வப்ரக்கியாதிநீ
சம்புவே யெனை வந்தாளாக (சம்போ)

ஆனையையுரித்து ஆலத்தைக்குடித்து
அரவத்தைப்பணிபூண்ட ஐயா
அங்கையில்மழுவா அரைபுலித்தோலா
அடியேனைக்காத்திடுமையா (சம்போ)

மாலையேபிடித்தாய் மலர்க்கணை தடுத்தாய்
மலைமகள் தன்கை பிடித்தாய்
மலையேபொற்சிலையா மாலெனக்கணையா
மகாதேவா திரிபுரம் முடித்தாய் (சம்போ)

அமரரைக்காத்திட அசுரரைத்தீர்த்திட
அறுமுகவனையீன்ற நாதா
அங்கமுமுருகி ஆனந்தமானேன்
அடியேனைக்காக்க வொண்ணாதா (சம்போ)

கயிலையில்வாசா காரும்சர்வேசா
காசியில்வாழ்விஸ் வேசா
கருதியேவந்தேன் கார்விசாலாக்ஷி
கடையனைக்காருஜக தீசா (சம்போ)

பார்வதியென்றனும் பணியும்யேகாம்பரம்
பகவானே கச்சியம் பதியே
பலகாலமுந்தன் பாதமதைதந்து
பாதுகாத்திடுமேநீ கதியே (சம்போ)

சம்புலிங்கேசா சதுர்மறைவாசா
சச்சிதானந்தவி னோதா
சர்வதயாபரா சஞ்சலமகற்றி
சதாகாலமுன்னடி தாதா (சம்போ)

கடித்தவூனுண்டு கண்ணையுங்கொண்டு
கண்ணப்பனைக்காத்த பொருளே
காளத்திநாதனே காரும்பொற்பாதனே
கருணைவைத்திடவுனை தருளே (சம்போ)

## கீர்த்தனைகள்.

அயன்மால்காணு ஆனந்தக்கூத்தரே
அய்யனே திருவண்ணு [illegible]லையா
அன்னைக்கிடையாக மன்றத்தாடுஞ்சுடரே
அடியேனைக்காரும்பொற் சிலையா (சம்போ)

சிற்சபைவாசா நிருத்தநாகா
சிறுவினைக்காத்திட வாரும்
சிவகாமியம்மையும் சித்தமகிழ்ந்த
சிதம்பரவாசனே வாரும் (சம்போ)

மலர்மாலைசாத்தும் மலையரசன்மருமகன்
மைந்தன்வீராசாமிமேல் நேசவா
மாதவப்பொருளே மறை[illegible]
மனதுலைத்தாளு [illegible]பாவா (சம்போ)

---

இராகம்-நாதநாமக்கிரியை. ஆதிதாளம்.

பல்லவி.

ஆடுகின்றார் ஐயன் கூத்தாடுகின்றார்.

அநுபல்லவி.

ஆடுகின்றாரடியார்களுக்க களிக்க
அய்யன் கடேசருக் காணைத்தம் சொலிக்க (ஆடு)

சரணங்கள்.

நாரதர்வீணையின் னல்லிசை தொனிக்க
நான்முகன்றான் வரிசைத ளிக்க
பூரானந்தமாயன் மத்தள மடிக்க
பதஞ்சலி வியாக்கிரபாதரும் நடிக்க (ஆடு)

அண்டியவன்பர்கள் தீவினை யழிக்க
ஆர்கலிலோகத் தருட்டிரா செழிக்க
சண்டியெனுங்காளி வெட்கியே விழிக்க
சாம்பவிகண்டுன் தழைபண்டி கொழிக்க (ஆடு)

அண்டர்பூமலர் மாரி பொழிந்திட
ஆனந்தபாற்கடல் வெள்ளம் புரண்டிட
தொண்டன்வீராசாமி தொழுது வணங்கிட
தன்னடைமனித பொற்றொம் சொலித்திட (ஆடு)

இராகம்-தன்யாசி, தாளம்-ஆதி.

பல்லவி.

அம்பலவாணன்றும் யின்னமொருதரம்
ஆனந்தநடன மாடினார்

அநுபல்லவி.

சம்புலிங்கேசனும் சாம்பவிமகிழ்ந்திடும்
அன்பன்குருநமசி வாயன் களித்திட (அம்பல)

சரணங்கள்.

நாரதாதியர் வீணையை யெடுக்க
நாரணன்மத்தளம் இனிமையோட டிக்க
ஆரணன்கைகளில் தாளமும் பிடிக்க
ஆனந்தபாற்கடல் வெள்ளமு மெடுக்க (அம்பல)

துதித்திடுமன்பர்கள் தீவினை போக்கி
தத்திப்பையரவு தோல்இடையினில் வீக்கி
மதித்திடுஞ்சுமை யபிசிரத்தினிற் றூக்கி
வருந்திட அழகிய மலர்பதம் தூக்கி (அம்பல)

மாதவர்முனிவர்கள் மலர்கள் சொரிந்திட
மண்டலத்தோர்கள் கொண்டா டிடித்திட
சீதரிகெங்கையும் சிரசில் குளித்திட
சிறுவன்வீராசாமி தினமும் துதித்திட (அம்பல)

---

இராகம்-அடாணா, தாளம்-ஆதி.

பல்லவி.

ஆனந்தத்தாண்டவமாடினார்-அய்யனும்
தில்லையில் தையாதையாவென

அநுபல்லவி.

கானமயிலேறும் வேலன் தனைபயின்ற
ஆலந்தனைக்குடித்த அமுர்தலிங்கேசனும் (ஆனந்த)

சரணங்கள்.

காளியுமருகினில் கண்டு களித்திட
கனகசபைதனில் நடனம் புரிந்திட
தாளமத்தளவீணை நாரதர் மீட்டிட
தாமரைப்பாத மிரண்டும் ஜொலித்திட (ஆனந்த)

## கீர்த்தனைகள்.

பாதத்திருநடன சிலம்பு கலகலென
பாதிமதியும்கெங்கை தளதள தளலென
சிதரன்வாயில்சங்கு பம்பம் பம்மென
சித்தர்முத்தரெலாம் திருவடிதுதி பண்ண (ஆனந்த)

விண்ணவர்மண்ணவர் வேண்டியு மனவிருள்
வேதனுமாலும் காணுவரும் பொருள்
பன்னகாபரணனே பார்வதிதனக் கருள்
நண்ணும்வீராசாமி நன்பாய்துதிக்கும் தெருள் (ஆனந்த)

---

### இராகம்-ஆரபி, தாளம்-ஆதி.

பல்லவி.

ஆருக்குத்தான்தெரியும்-அவர்பெருமை
ஆருமறியாம லாட்டையெடுத்தது (ஆருக்கு)

சரணங்கள்.

பத்தர் முத்தர் சுத்தி நெருங்கிட
பதஞ்சலி முனிவரும் பக்கத் திருந்திட
சத்திசிவகாமி அம்மையும் வந்திட
சமயம்பார்த்தங்கே ஆட்டை யெடுத்திட (ஆருக்கு)

மாதவர் முனிவர்கள் மலர்வேவி போட்டிட
மாமறைக்கிற்றுசேல் சுத்தி பிடித்திட
சிதரன்மலரயன் வந்து நெருங்கிட
திருப்புலிவர்தங்கே ஆட்டை எடுத்திட (ஆருக்கு)

எதுக்கோசிநீதகிதம் இப்படி செய்வது
இம்பர்வானுலகில் எல்லோரும் உய்வது
வாதுசெய்காளியும் வாராம லிருப்பது
வம்புவருமென்றே அம்பல மானது (ஆருக்கு)

காலன்வாராமுன்னே கழலடி சேர்ப்பது
கடையன்செய்திடும் குற்றமோ பார்ப்பது
பாவன்வீராசாமி படுந்துயர் தீர்ப்பது
பாரமோஇதுவனை வாராமல் இருப்பது (ஆருக்கு)

---

இராகம்-தன்யாசி, தாளம்-ஆதி.

பல்லவி.

ஆடவருவாரோ-அய்யன் கூத்
தாடவருவாரோ.

அநுபல்லவி.

ஆடதிருநடம் பாடபதஞ்சலியும்
நாடிக்கனகசபை கூடியதில்லையில் (ஆட)

சரணங்கள்.

வையம்புகழ்ந்திடும் துய்ய சிகாமணி
மானவர்தானவர் போற்றிய மாமணி
துய்யமலரயன் துதிக்க மகிழ்மணி
அய்யனும்காளியோ டாடிய நவமணி (ஆட)

தாமரைபாதத்தில் தண்டைகொலுசு மின்ன
தழைத்ததிருமார்பில் நாகாபரணக் துன்ன
தாளமத்தளம்வீணை வொலி யென்ன
தத்திமிகிடதக திங்கண தோமென (ஆட)

கெங்கைபிறையுடன் பொங்கு மகிழ்விடை
சங்கைவிலவல அங்கைமழு படை
மங்கையிடபாகன் இங்கேவாரோ தடை
ஐங்கண் றனையீன் றங்கங்காதரனே சடை (ஆட)

மானையிடகரமேந்தியே பிடித்திட
மரகதவல்லிசிவகாமி மகிழ்ந்திட
வேணுகோபாலனை சங்கு வாயிலேயூதிட
வித்தகனே வீரசாமி துதித்திட (ஆட)

---

இராகம்-தன்யாசி, தாளம்-ஆதி.

பல்லவி.

காக்கவருவாயே நந்தியிலேறி.

அநுபல்லவி.

பார்க்கபரம்பெற மார்க்கமறியாவினை
தீர்க்கவருவாயே நந்தியிலேறி (காக்க).

சரணங்கள்.

மங்கைமகிழ்பவனே திங்களணிசடையில்
கெங்கைதரித்தவனே நந்தியிலேறி (காக்க)

மோனமூவர்நிலை காணவிடுத்தகலை
மானைப்பிடித்தவனே நந்திமேலேறி (காக்க)
உன்னரியசாகுல மன்னவழியசுப்பிர
மண்யனையீன்றவனே நந்திமேலேறி (காக்க)
மூட்டிபுலகமூற்று நெட்டிதுளைத்தபன்றி
குட்டியைசுட்டவனே நந்திமேலேறி (காக்க)
உள்ளமுறுகிவள்ளால் வல்லபனாசனுக்கு
பிள்ளையாவந்தவனே நந்திமேலேறி (காக்க)
திரையமழுவினெரிக் குரியவல்லியத்தரி
அரையில்தரித்தவனே நந்திமேலேறி (காக்க)
நேமிமகிழ்சிவ காயியருள்வீரா
சாமிதனையாளவே நந்திமேலேறி (காக்க)

---

இராகம்-சங்கராபரணம், அடதாளம்.

பல்லவி.

அரகாரா சங்கரனே சிவகாமி
அழகுமணாளலோ லனே.

அநுபல்லவி.

அரகரமகாதேவா அமரர்கள்துதியோகா
மரகதவல்லிபங்கா மார்க்கசகாயலிங்கா (அர)

சரணங்கள்.

தில்லையில் ஆடிடு மணியே-மிக
தித்திக்குமுக் கனியே
தொல்லையிரும்பிறவிசூழுந் துன்னயகற்றி
அல்லல்களையறுப்பா யானந்ததாண்டவா (அர)

சொல்லுமாதவப் பொருளே-வேத
சுருதியின்மாமறை முதலே
வில்வபதியேயீசா விண்ணவர்துதிநேசா
கல்லவரந்தருவாய் நாலையம்பதிவாசா (அர)

திருவஞ்சியூரொனும் பதியே-அதில்
சிறுவன் வீராசாமி துதியே
கருமலர்சூழ்செக ஜோதேன்னதருள்
வரமுதவம்பல வாணனேன்னிதருள் (அர)

இராகம்-காம்போதி, தாளம்-ஆதி.

பல்லவி.

உந்தன்றிருபதம் யெந்தனுக்குகந்து
தந்திடுவாயையனே.

அநுபல்லவி.

சந்தனையின்ற சந்திரசேகரா
வந்துகாத்தருள் சுந்தரிமனோகரா (உந்த)

சரணங்கள்

வையமுண்டமாயன் மாசார்மத்தளம் போட
வந்துநாரதர்வீணை வண்ணயிசைகள் கூட
மெய்யில்வெண்ணீறணிந்த வேதனுமறை பாட
தையதையவென தாண்டவ மாடிய (உந்த)

அந்திரதுந்துபியிந்திரன் அறைந்திட
அமரர்கள்பூமலர் வாரி சொரிந்திட
சிந்தைகுளிர்கெங்கை சிரசினின் றாடிட
சின்மயதேவனும் தில்லையில் ஆடிய (உந்த)

கையிலுடுக்கைமழு மானும் பிடித்திட
காலில்தண்டை கொலுசும் சொலித்திட
தாய்சிவகாமி அம்மை மகிழ்ந்திட
அய்யனேகாளியோ டானந்தங் காட்டிய (உந்த)

அண்டமுனிவர்கள் கொண்டா டித்திட
ஆனந்தபாற்கடல் வெள்ளம் புரண்டிட
மண்டலத்தோர்கள் வந்து பணிந்திட
தொண்டன்வீராசாமி தொழுது வணங்கிய (உந்த)

---

இராகம்-காட்டை, தாளம்-ஆதி.

பல்லவி.

நிர்த்தன நடராஜா-பதஞ்சலிக்குவென
நிர்த்தனமாடிய (நிர்த்த)

அநுபல்லவி.

நிர்த்தனமிகுகன ரத்தினசபாபதி
அற்புதமாய்தினம் ஆடுங்குணநிதி (நிர்த்த)

சரணங்கள்.

காலன்றனையுதைத் தாலந்தனைகுடித்து
பாலன்றனைகாத்த சிவாய்மருள்
காலம்போக்கவேயிந்த சாலங்கள்செய்கிறாய்
சோலமயில்மேலேறும் வேலவன்றனைபயின்ற (கீர்த்த)

தேடிமாலயன்று நாடியுனதடி
வாடிவணங்கும் பொற்சிலையா
சூடிமலரணியும் ஆடுஞ்சிலம்பொலியும்
பாடும்பதஞ்சலியும் பார்த்துமனமகிழ (கீர்த்த)

நந்திவாகனமேறு மந்திவண்ணனேசிறு
மைந்தன் வீராசாமியைகாரும்
சுந்தரர்தினந்துதி சந்திரசடாதரா
வந்துகாத்தருள் சுந்தரிமனோகரா (கீர்த்த)

---

இராகம்-இங்கிலீஷ்மெட்டு, ஏகதாளம்.

பல்லவி.

ஆலகாலவிடமருண்ட நீலகண்டனே
பாலன்காணும்தேடுகின்றேன் காலகண்டனே.

சரணங்கள்.

நந்தியேறியெந்தன்முன்னே வந்தருளையா
கந்தனையேபயின்றெடுத்த சந்திரசேகரா (ஆல)
கருணைவைக்கதருணமையா கமலபாதனே
காருமெந்தனுருமையா விமலாவென்னையே (ஆல)
முத்திதரும்வித்தகனே சத்திலோலனே
சித்தம்வைத்தாளித்தங்காரும் முத்தாவென்னையே (ஆல)
சுந்தரர்க்குதூதுசென்ற அந்திவண்ணனே
மைந்தன் வீராசாமிதனை வந்துகாருமே (ஆல)

---

இராகம்-சங்கராபரணம், அடதாளம்.

பல்லவி.

நம்பியிருநெஞ்சமே-நடேசனை நம்பியிருநெஞ்சமே.

அநுபல்லவி.

நம்பிவந்தடுத்த நன்னுமாநீக்கண்டனை
அன்புடன்ஆட்கொண்ட ஆண்டவன்பதங்களை (நம்பி)

சரணங்கள்.

ஆலக்குடித்தவனார்மனதே    அதைநீவுற்றப்பார்
காலந்தனிலேவந்து    பாலன்றனக்கன்று
கோலமுடிசாய்த்த    நீலகண்டன்பாதம்    (நம்பி)

ஆனையுரித்தவனார்மனதே    புலிதோலைதரித்தவனார்
மானையுமுடிக்கையு மழுவை    யுங்கைக்கொண்
டாணந்ததாண்டவ    மாடியபாதங்களை    (நம்பி)

கண்ணையளித்தவனார் காளவன்கரியைசுவைத்தவனார்
கண்ணும்வீராசாமி    தானும் துதித்திடும்
பொன்னம்பலவாணன்    பொற்பாதகமலங்களை    (நம்பி)



## விஷ்ணுகீர்த்தனைகள்.

இராகம்-முகாரி, தாளம்-ஆதி.

பல்லவி.

ராமராமஹரே ஸ்ரீஅரி ராமாராமஹரே ஸ்ரீஹரி
ராமாராமாஹரே.

அநுபல்லவி.

ராமராமவென ராமனை துதித்தால்
ராமனுமேல்சுகம்    வருமே
காமனையளித்த    ராமனை துதிக்க
கர்மவினையெலா    மறுமே    (ராம)

## சரணங்கள்.

அண்டபுவன அகிலசராசர
ஆதாரமாகிய தேவா
தண்டணிதுளப தாரணிமார்பா
தனையனைக் காக்கநீ வாவா (ராம)

பண்டரிபுரிநாதா பக்தர் துதிவினோதா
பாண்டுரங்கையனே வண்ணா
தொண்டனுமுன்னை தொழுகிறேனையா
சீதைசமேதனே வா கண்ணா (ராம)

அரங்கனேயிரு ஆற்றினடுவிலே
அரவணை துயின்றிட்ட அய்யா
ஸ்ரீரங்கநாதனே தியாகவைபோகனே
சிறுவனை காக்கநீ மெய்யா (ராம)

பத்திராசலவாசா முத்திதருநேசா
பக்தன் ராமதாசனை நாதா
சித்தம்வைத்து காத்த செங்கமலபாதா
சேவையையெனக்குநீ தாதா (ராம)

திருவெவ்வளூர் வீரராகவா வுந்தன்
திருவடிக்கடைக்கலம் பாராய்
கருவழிநொடிகலங்கிடா முன்னே
கண்ணனே யுன்னருள் தாராய் (ராம)

காஞ்சிபுரியில்வாசா கரிவரதராசா
கருடவாகனமேறி வாரும்
அஞ்சனமேனியனே அருள்வைகுந்தனே
அமலனே திருக்கண் பாரும் (ராம)

திருமலை திருப்பதி திருத்தொண்டர்கள் துதி
திருமங்கைலக்ஷ்மி லோலா
வரும்வினையறுப்பாய்வட வேங்கிடத்தானே
வந்தருள்புரியுங் கோபாலா (ராம)

ஆலிலைமேல்பள்ளி அமர்ந்திடுநாதா
அடியேனைக்காக்க வொண்ணுதா
அலைகடல்துரும்பாய் அலைகிறேனனே
ஆதரிப்பாய்செக நாதா (ராம)

மச்சாவதாரா மறைமுதல்யோகா
மலரயனைக்காத்த நேயா
பச்சிளந்துளபம் பனிமலர்சூடும்
பகவானே சங்குறும் வசயா (ராம)

ஆமையாய்வந்து ஆழியைசுமந்து
அமுதமே அமரருக் கிந்தாய்
சமயமீதையா சச்சிதானந்தா
சரணமடைந்தேன் வைகுந்தா (ராம)

வராகமதாகி யசுரனை துலைத்து
வடிவர்கள் துயர்தனை தீர்த்தாய்
வாராயோவென்குறை தீராயோமுராரி
வணங்குநகஜேந்திரனை காத்தாய் (ராம)

தூண்டயிரணியனை துணிக்கநரசிங்கமா
தூணையெரண்டாய் பிளந்தாய்.
தொண்டன்பிரகலாதன் தொழுதுவணங்கிட
சோளங்கிமலைதனில் யமர்ந்தாய் (ராம)

வாமனரூபா வளர்விஸ்வசொரூபா
மண்ணையேமுவடி யளந்தாய்
காமனையீன்ற கண்ணனேமாபலிக்கு
கனமுடிமண்ணுக்குள் தந்தாய் (ராம)

பாரியவில்பாச ராமவதாரா
பகவானேயென்வினை போக்கி
பங்கயமலர்நேத்ரா பரமவைகுந்தகுத்ரா
பக்தவச்சலா அருள் நோக்கி (ராபூ)

ராக்ஷதகுலகாலா ராவணசம்மாரா
நம்பும் விபீஷணனை காக்க
ஆனந்சானகியுடன் அயோத்திநகர்வந்து
அன்னையின் துயர்தனை நீக்க (ராம)

கன்றையுமெறிந்து கனியையுமறுத்து
கஞ்சனையுமுடித்த காலா
குன்றையுமெடுத்து குடையாகபிடித்து
கோலவளைக்காத்த சீலா (ராம)

பாஞ்சாலிதுரௌபதைக்கு பங்கம்வாராமல்காத்த
பாலகிருஷ்ணனே நேசா
சஞ்சலமகற்றி சாத்தியஞ்செய்த
சாமளவண்ண ஸ்ரீனி வாசா (ராம)

சந்ததமுந்தனை சிந்தனைசெய்திடும்
மைந்தன்வீராசாமியே பாராய்
நொந்தேனே அய்யா வந்தேனே மெய்யா
சிந்தைமகிழ்ந்து அருள்தாராய் (ராம)

---

ஸ்ரீராகம்,, தாளம்-ஆதி.

பல்லவி.

மாலேயெனை வந்தாள்-யாளே

அநுபல்லவி.

பாலனுமுனைநிதம் பஜனைசெய்யவின்றி
சாலஞ்செய்யாமலே ஆதிமூலமே நீயருள்-திரு (மாலே)

சரணங்கள்.

மாதவப்பொருளே யென்முன்வருவாய்
பூதகியெனும்பெரும் பாதகிதனைக்கொன்று
காதகசகடனை காலால்வுதைத்த-திரு (மாலே)

காயாம்பூவண்ணனே நீகாரும்
வேய்குழலெடுத்து மேய்பசுவிடுத்து
மாயகன்றெடுத்து சாயமடித்த-திரு (மாலே)

பாவலர்போற்றும் நவமணியே
காவலர்களுநாட கோவலர்களுக்கூட
தாவிமலையெடுத்து ஆவினங்காத்த-திரு (மாலே)

சஞ்சலமகற்றி நீயேகாராய்
அஞ்சனமேனியனே கஞ்சன்தனைமுடித்து
பஞ்சவர்தனைகாத்த பார்த்தசகாய-திரு (மாலே)

வண்மைமன்மீதிலு மக்கேசனே
அன்பருக்குதந்திடும் தவன்மணிகிருஷ்ணனே
நண்பன்வீராசாமி காருந்துதி-திரு (மாலே)

---

இராகம்-கேதாரகௌளம், தாளம்-ரூபகம்.

பல்லவி.

கோதண்டமேந்திய கையா
கோரும்வரந்தா ராமையா

அநுபல்லவி.

கோதண்ட கோளமு முற்ற
கோவா சிவா அனுகூலா மேலா கொற்ற (கோ)

சரணங்கள்.

அண்டமுன்றுங் கைக்கொண்டாண்ட சூரன் சத்தி
ஆடுமகங்காரம்யாவும் நீங்கவரும் புத்தி
தொண்டன் பிரகலாதன் தோஷமியாவுங் கொத்தி
தூய்மைசெய் கேசரிலே சேயா மாயா வெற்றி (கோ)

மண்ணையளந்திட மறையவனு யெற்றி
மாபலி விடுத்தாரையதைப் பற்றி
சுன்னின்முன் றேன்கண்ணைசோள் ளையாக சூத்தி
சூதுசெய் செம்பீர தீர வீர வெற்றி (கோ)

மதங்கொண்டயானை மடுவிலே சங்க
வருத் தமுதலையை சக்கரத்தால் மங்க
விதஞ்செய்தவா வீராசாமிசொல் புங்க
வேதா போதா செகநாதா கீதா தங்க (கோ)



## வஞ்சூரம்மன் கீர்த்தனை.

இராகம்-தன்யாசி, அடதாளம்.

பல்லவி.

ஆதரி ஆயி மகேஸ்வரி ஈஸ்வரியே
ஆதாரம் உனை விட வேறில்லையே

அநுபல்லவி.

சோதரி மாதங்கி தேவியே வஞ்சி
ஆதியாய் வஞ்சூர் அமர்ந்த கீர்த்தாரணி (ஆதரி)

சரணங்கள்.

சோதிசெஞ்சடை மீதிலுறு வேணி
திவ்யரசமதா மொழி வாணி
மாதகிருவி மாலினவ கோதாணி
மந்திரசடாதரன் மகிழும் கல்யாணி (ஆதரி)

துண்டமிடனை துலைத்திட்ட மர்த்தனி
சூலிகபாலி திரந்த நிர்த்தாரணி
தொண்டர்கள் நேசம் அதித்திடும் காரணி
தோகையாளியேறும் காளியே டாகினி (ஆதரி)

செகதலம்புகழ் திரிபுர சுந்தரி
தேவியெங்களை காக்கும் கிரந்தரி
மகிமைவிமலி மாதங்கி யீஸ்வரி
வஞ்சனைசெய்யாதே வந்தெனை யாதரி (ஆதரி)

விண்ணவர்கிதம் வேண்டிடும் நாரணி
வேதசங்கீத விநோதசம் பூரணி
தண்மலர்பாத சிலம்பணி காரணி
தாசன் வீராசாமி தமிழுக்கு காரணி (ஆதரி)

---

இராகம்-ஆனந்தபைரவி, அடதாளம்.

பல்லவி.

ஆதரி அம்மா அருள் புரிக்தாள்வஞ்சி அம்மா.

அநுபல்லவி.

மாதரிகுலி மாலி நவகோணி
மந்திரசேடாதாரமங்கள கல்யாணி (ஆதரி)

சரணங்கள்.

சத்திசெகத்தில் யிருந்த மருத்துவம்
பெற்றபிரணவ ஓங்காரி
வெற்றிவேல்கத்திடாரில் பற்றிய கரத்துடன்
சத்திசிவகாமி சாமுண்டி யலங்காரி (ஆதரி)

அண்டபிண்டமும் அகிலசரா சரமும்
ஆதாரமாகிய காரணன் வகையே
கண்டுகளித்திடும் தொண்டரை காத்திட
சண்டமயிடனை சங்காரஞ் செய்தாயே (ஆதரி)

பத்தர்முனிவர்களில் நித்தமுமேவும் பணி
பரமத்தைநாடி செள மாரி
முத்திகொடுத்திடும் வித்தகியே சிவ
பத்தன்வீராசாமி பத்திக்கிரங் கி (ஆதரி)

முற்றிற்று.

27
118976